

FREE EDITION

January – 2019

# ஜோதி

Jothi
Spiritual Newsletter

ஜோதி 12 : சுடர் 11 -143

ஆன்மிகச் செய்திச்சுடர்

### மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

மேல்மருவத்தூர்
ஆதிபராசக்தி சித்தர்பீடத்தில்

**சக்தி மாலை –**
**இருமுடி விழா**

இருமுடி செலுத்துதல்
20.01.2019 வரை

**தைப்பூச ஜோதிப் பெருவிழா**

ஆன்மிககுரு
அருள்திரு அம்மா
தன் திருக்கரங்களால்
ஏற்றி வைக்கவிருக்கும்

ஏக ஜோதியான
**தைப்பூச ஜோதி**
**21.01.2019**




# கள்ளர்களின் மனத்தை மாற்றிய சக்திமாலை

இன்றைய கலியுக மக்களின் இன்னல் தணிக்கவும், இன்ப வாழ்வு பெறவும் அன்னை ஆதிபராசக்தி இந்த அவதார காலத்தில் உருவாக்கிக் கொடுத்துள்ள வாய்ப்புகள் பல! அவற்றுள் சக்தி மாலை அணிந்து விரதம் இருந்து இருமுடி செலுத்துகிற வாய்ப்பும் ஒன்று.

கோடிக்கணக்கான மக்களை ஈர்த்து அவர்கட்குக் கருணை காட்டி ஊழ்வினை தணித்து, தன் அருளால் அமுதத்தை ஊட்டவே அந்த மருவத்தூர் தாயுள்ளம் விரும்புகிறது. அது கருதியே "ஏழை எளிய மக்களையும், பாமர மக்களையும் உங்கள் செலவில் சக்தி மாலை போட்டு இருமுடி எடுக்க வைத்து இங்கே அழைத்து வா!" என்று அந்தத் தாய் தன் தொண்டர்கட்குக் கட்டளையிடுகிறாள். அதனால் உனக்கும் பயன், அவர்கட்கும் பயன் என்று சொல்லிக் காட்டுகிறாள்.

அன்னையின் அருள்வாக்கு ஆணைகளைத் தலைமேற்கொண்டு செயல்புரியும் தொண்டர்களுள் ஒருவர் சக்தி பாலசுப்பிரமணியம். திருப்பூரைச் சேர்ந்தவர். சுமார் 200 ஏழைகட்குச் சொந்தச் செலவில் சக்தி மாலை அணிவித்து இருமுடி எடுக்க வைத்து மருவத்தூர் அழைத்துச் சென்று திரும்பி வந்தார்.

அவ்வாறு ஆலயம் சென்று திரும்பியபோதுதான் அந்த அற்புதமும் பயங்கரமும் கலந்த நிகழ்வு நடந்தது.

## இசைமணி

திருப்பூருக்கும் பல்லடம் நகரத்துக்கும் இடையே வாலிபாளையம் பள்ளம் ஒன்று உள்ளது. அந்த இடம் மிகவும் மோசமான இடம், அடிக்கடி கொலை, கொள்ளைகள் நடக்கிற இடம். இரவு 9.00 மணிக்கு மேல் அந்தப் பக்கம் யாருமே தனியாகச் செல்ல மாட்டார்கள். அவ்வளவு பயங்கரமான பள்ளம்!

இருமுடி செலுத்திவிட்டு வந்தவர்களில் உடுமலைப்பேட்டை மகளிர் மன்றத்தைச் சேர்ந்த 45 பெண்களும் இருந்தனர். மருவத்தூரிலிருந்து திரும்பி வந்தவர்கள் நேராகத் திருப்பூர் சக்தி பீடம் வந்து, திருப்பூரைச் சேர்ந்தவர்களை இறக்கிவிட்டு இரவு 10.00 மணியளவில் உடுமலைப்பேட்டையைச் சேர்ந்த மகளிர் மன்ற சக்திகளை அனுப்பி வைத்தார் சக்தி பாலசுப்பிரமணியன்.

அப்படி உடுமலை நோக்கி அவர்கள் வண்டி சென்ற போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது. அந்த மகளிர் சக்திகள் சென்ற பேருந்துக்கு முன்னாலே ஒரு லாரி போய்க்கொண்டிருந்தது.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

**"களை பயிரை அழிக்க நினைக்கிறது. பயிரால் உண்டாகும் நன்மை அதற்குப் புரிவதில்லை."**

## "ஜோதி"

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப்படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Sudar"**

## செய்திச்சுடரில்...


**கள்ளர்களின் மனத்தை மாற்றிய சக்திமாலை**

Page: 1 – 3

**UPCOMING EVENTS**
Melbourne: 5, 7
Sydney: 8, 9

**திருமதி அம்மா பதில்கள்**

பக்கம்: 6

**Divine Miracles**

Page: 3

**சித்தர்பீட விழாக்கள்**

பக்கம்: 13

**ஆன்மிக நாட்குறிப்பு**

பக்கம்: 14

**ஒரு பாமர பெண்ணுக்குக் கிடைத்த காட்சி**

பக்கம்: 8 - 9


## கள்ளர்களின் மனத்தை...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

அந்த லாரி மேற்சொன்ன வாலிபாளையம் பள்ளத்தைக் கடக்கும்போது, சுமார் 10 கொள்ளைக்காரர்கள் லாரியை வழி மறித்தனர். லாரியில் இருந்த செலுத்துனரையும் உடன் வந்த உதவியாளர்களையும் கத்தி, அரிவாள், தடி முதலான ஆயுதங்களைக் காட்டி மிரட்டிக் கொண்டிருந்தனர்.

அப்போது லாரிக்குப் பின்னாலேயே மகளிர் சக்திகள் வந்த பேரூந்தின் முகப்பு விளக்குகளின் வெளிச்சம் லாரியின் மீது பட்டது. லாரியை மடக்கிய கொள்ளையர்கள் பேரூந்தையும் மடக்கினர். மடக்கி நிறுத்தி திமுதிமுவென்று பேரூந்தில் ஏறினர். அவர்களைப் பார்த்த பெண் சக்திகள் "நீங்கள் யார்? என்ன வேண்டும்?" என்று கேட்டனர்.

அந்தக் கொள்ளையர்கள் என்ன நினைத்தார்களோ "எங்களுக்கு ஒன்றுமே வேண்டாம். முன்னாலே கொள்ளையடிக்கும் கும்பல் இருக்கிறார்கள். பார்த்துப் போங்கள்" என்று சொல்லிவிட்டு ஒன்றும் பேசாமல் இறங்கிக் கொண்டார்கள்.

கொள்ளையர்களையும் அவர்தம் கைகளில் இருந்த ஆயுதங்களையும் கண்டு பயந்து நடுங்கிப்போன மகளிர் சக்திகள் "அப்பாடா.. தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்!" என்று சொல்லியபடி, செலுத்துனரை நோக்கி, வண்டியை வேகமாக செலுத்து என்று அவசரப்படுத்தினார்கள்.

எத்தகைய அசம்பாவிதமும் இல்லாமல் உடுமலைக்கு வந்த மகளிர் தத்தம் பகுதிகளில் இறங்கிக் கொண்டனர். கொள்ளளையடிக்க வந்தவர்கள் ஒன்றும் செய்யாமல் இறங்கிவிட்டார்களே ஏன்? இது ஆச்சரியமாகவே இருந்தது.

ஒரு சில நாட்கள் கழித்து இது பற்றி அம்மாவிடம் எடுத்துக் கூறினோம். அன்று நடந்தது என்ன? அவர்கள் செயலற்ற இறங்கிப் போய்விட்டதற்குக் காரணம் என்ன?

அம்மாதான் .அந்தச் சம்பவத்தை விளக்கினார்கள்.

அவர்கள் பேரூந்தில் நுழைந்தபோதே கொள்ளையடிக்கும் எண்ணத்தோடுதான் நுழைந்தார்கள். வண்டியில் இருப்பவர்கள் சக்தி மாலை அணிந்து இருப்பவர்கள் என்று அவர்களுக்குத் தெரியாது. அம்மா என்ன செய்தது தெரியுமா?

அந்த மகளிர் அணிந்திருந்த சக்திமாலை ஒவ்வொன்றையும் நாகமாகக் காட்டியது. அந்த மகளிர் முகங்களையெல்லாம் அம்மாவின் முகங்களாகக் காட்டியது. ஒவ்வொருவர் கண்களிலிருந்தும் பிரகாசமான ஒளியைக் காட்டியது. இவற்றைக் கண்டு பயந்து போனதால் தான் கொள்ளைக்காரர்கள் இறங்கிக் கொண்டார்கள். இந்தப் பயத்திலேதான் என்ன சொல்வது என்று தெரியாமல் வாயிலே வந்ததைச் சொல்லிவிட்டு இறங்கி விட்டார்கள் என்ற அம்மா மேலும் சொன்னார்கள்.

"பேரூந்திலே வந்த நம் மகளிர் சக்திகளில் ஒரு சிலர் அம்மாவின் மந்திரங்களைச் சொல்லிக்கொண்டே வந்தார்கள். ஒரு சிலர் அன்னையின் புகழைப் பாடிக்கொண்டே வந்தார்கள். ஒருசிலர் அன்னையின் அருளையும் கருணையையும் நினைத்தபடி ஒருமித்த எண்ணத்தோடு பயணம் சென்றனர். அப்படிச் சென்றதால்தான் அம்மாவின் அருள் தக்க சமயத்தில் எல்லோரையும் காப்பாற்றியது" என்று விளக்கினார்கள்

சக்திகளே! இதிலிருந்து நமக்குத் தெரிவது என்ன?

(தொடர்ச்சி...3ஆம் பக்கம்)

## கள்ளர்களின் மனத்தை...

(2ஆம் பக்க தொடர்ச்சி)

சக்திமாலை ஒரு புனிதமான மாலை. சக்தி மாலை அணிந்து விரதம் இருப்பவர்கள் ஐந்து நாட்களும் பயபக்தியுடன் ஊசிமுனையில் நிற்பதுபோல நெறியோடு இருக்க வேண்டும். அந்த இருமுடி விரதம் நமது முன்னைப் பாவங்களில்இருந்து விடுவிப்பது, தெய்வ அருளால் நமது பாவங்கள் மன்னிக்கப்பட அந்த விரதம் ஒரு வாய்ப்புத் தருகிறது.

பேருந்தை அமர்த்திக்கொண்டு இருமுடியுடன் வரும்போது அரட்டைப் பேச்சு, சினிமா நடிகர், நடிகையர் பேச்சு, அரசியல் பேச்சு பேசிக் கொண்டு வரவே கூடாது.“காமக்கிளர்ச்சி, போதை ஊட்டும் பாடல்களைப் போட்டுக்கொண்டும் கேட்டுக் கொண்டும் வரக்கூடாது. அன்னையின் மந்திரங்கள், அன்னையின் புகழ் கூறும் பாடல்கள் இவற்றையே சொல்லியபடி, பாடிய படி பயணம் வந்தால் அம்மா நலமுடன் துணைக்கு வருவாள். ஆபத்து வராமல் தடுப்பாள்.

**சக்தி மாலை அணிவோம்! சஞ்சலங்கள் போக்குவோம்!**
**இருமுடி காப்போம்! இருவினை அகற்றுவோம்!**

ஓம் சக்தி!

## Divine Miracles at Melmaruvathur

## You vacate the house:

S.V.Sampath Kumar lives in NGO Nagar in Chenglepet. He was a devotee of Mother. Suddenly one day when he went to Melmaruvathur, Mother told him “You have to vacate this home immediately. Otherwise you may see 3 dead bodies here.”

He was shocked and asked Her what to do? He did not know how to do it immediately. Mother said, “I can protect you for some time. You try to move at the earliest.” He went to Villupuram from Melmaruvathur. On the way his bus met with an accident. He miraculously escaped. He realized that the 108 mantras which he was chanting saved his life.

That night he came back home happily to share his experience, but his daughter had a big problem. When she went to drop somebody in the railway station, her cycle was hit by a van. She was thrown and she fell down. She somehow managed and went to her college; but because of unbearable pain she had come back after treating herself in a hospital. He understood that Mother has saved not only his life but his daughter’s also. In this accident, a bull was hit which died. He also saw a dead lizard close to his daughter’s bed. He understood the Sakthi of Mother.

After some days all three of them went to Chennai to attend a function. It was the time when weekly worship centre were coming up in Chennai. They left their son Kanmani, who was slightly not well. After they left he developed acute pain. Their son-in-law was also not at home. Their second daughter Kalpana was there alone. She was afraid and she ran to the next house. She brought Mr.Gangatharan and his wife. Gangatharan’s wife works as a nurse in the hospital. They found that the boy had to be hospitalized immediately.

They wanted ‘O’ group blood in the hospital immediately to perform an emergency operation. Gangatharan’s blood group was ‘O’. He donated. Kanmani was saved. Everybody realized it was not just the blood donated but, Mother’s eternal bliss.

***

# ஒரு பாமர பெண்ணுக்குக் கிடைத்த காட்சி

ஆங்கில மோகம், அமெரிக்க நாகரிகம், விஞ்ஞானம், தொழில் நுட்பம், அறிவியல் போன்ற எதுவும் எட்டிக்கூடப் பார்த்திராத, உண்ண உணவு, உடுக்க உடை, உறங்க இருப்பிடம் இவற்றிற்காக மட்டுமே உழைத்து, அதில் கிடைப்பதைக் கொண்டு திருப்திப்பட்டு வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தில் வாழும் அப்பாவி மக்களைக் கொண்ட எண்ணற்ற இந்திய கிராமங்களில் ஒன்று பழையவலம்!

தியாகேசப் பெருமான் கோயில் கொண்டுள்ள திருத்தலம் குரு தட்சிணாமூர்த்தி சுவாமிகள் சீவசமாதியிருக்கும் சித்தர் பூமி, கர்நாடக சங்கீத மும்மூர்த்திகள் பிறந்து வளர்ந்த இசைத்தலம், சுந்தரர் பாடிய புண்ணிய பூமியாம் திருவாரூர் அருகே உள்ள குக்கிராமம் தான் பழையவலம்!

பழையவலத்திலுள்ள கிருஷ்ணமூர்த்தி,இரமணி தம்பதிகளுக்குப் பிறந்தவை இரண்டு குழந்தைகள். மூத்த பெண்ணின் பெயர் வேம்பு. அவள் தம்பியின் பெயர் குருமூர்த்தி. ஆசாரி வேலை பார்க்கும் கிருஷ்ணமூர்த்திக்கும், அவன் மனைவி இரமணிக்கும் எழுதப்படிக்கத் தெரிந்திருந்தது. குடும்பத்தின் வறுமை காரணமாகப் பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியவில்லை. காலம் உருண்டோடியது. கிருஷ்ணமூர்த்தி என்னும் ஆன்மா அதன் உடலை விட்டுப் பிரிய வேண்டிய நாளும் வந்தது.

கணவனின் சம்பாத்தியத்தில் வாழ்ந்து வந்த குடும்பம் அவர் மறைவிற்குப் பின்னர் ஓட்டை விழுந்த கப்பல் போலானது. நீந்தத்தெரியாத குழந்தைகளை, வசதியான கப்பல்களில் வேலை செய்து பிழைத்துக்கொள்ள அனுப்ப வேண்டியிருந்தது.

**சக்தி வா. குருமூர்த்தி** – தஞ்சாவூர்

அன்னை ஆதிபராசக்தியின் ஆன்மிகப் பிடியில் சிக்குண்ட குடும்பங்களுள் ஒன்று திருவாரூர் முத்துக்கிருஷ்ணன் அவர்களின் குடும்பம். இவருடைய வீட்டில் எடுபிடி வேலை செய்ய 1995 ஜூன் மாதம் வந்தாள் வேம்பு.

முத்துக்கிருஷ்ணன் குடும்பத்தோடு ஞாயிற்றுக்கிழமை சீரோடும், சிறப்போடும் நடக்கும் வார வழிபாட்டிற்கு முதன்முதலாக வேம்புவும் சென்றாள்.

சென்னை ஆன்மிக மாநாட்டில் வைக்கப்பட்ட பிருமாண்டமான பழைய வண்ணப்படத்தை வைத்துச் சிறப்பான முறையில் வழிபட்டு வரும் மன்றம் திருவாரூர் பொதுமன்றம். பக்தியில்லாது வெறும் வறட்டுத் தத்துவம் பேசித்திரிவோருக்குக் கண் திறவாத ஆதிபராசக்தி, ஆழமான, சலனமற்ற பக்தியோடு சுயநலம் இல்லாமல் தன்னைப் பார்க்க வந்த 17 வயது உருவத்தால் சிறுத்து, உள்ளத்தால் உயர்ந்த இளம் கன்னி வேம்புவிற்கு தன் இடது கண்ணைத் திறந்து அருள்பாலித்தாள். சில நிமிடமே நீடித்த அந்தத் திருக்காட்சியைக் கண்டு உடல் சிலிர்த்தது. சிரிப்பதா, அழுவதா என்றெல்லாம் தெரியாது வணங்கி நின்றாள் வேம்பு.

வறுமையில் வாடும் தன் குடும்பத்திற்கோ, தனக்கோ எதையும் வேண்டத் தெரியாது அல்லது வேண்ட விரும்பாது உலகோரின் பார்வைக்குப் பிழைக்கத் தெரியாதவளாய்க் காட்சியளித்த வேம்பு, வாரந்தோறும் வழிபாட்டிற்குத் தவறாமல் சென்று தன்னாலான தொண்டுகளைச் செய்து வந்தாள்.

முதல் தரிசனத்திலேயே அன்னை கண் திறந்து அருட்காட்சி பெற்ற வேம்புவிற்கு ஒரு நாள் அன்னை ஆதிபராசக்தி அடிகளார் என்னும் மானுடம் கொண்டு நடமாடி வரும் சித்தர்பூமி மேல்மருவத்தூருக்குச் செல்லும் பாக்கியமும் கிட்டியது.

ஆம், நவராத்திரி விழாவின்போது விஜயதசமி திருநாள் அன்று (அக்டோபர் 18, புதன்பிழமை 1995) சக்தி முத்துக்கிருஷ்ணன் குடும்பத்தாரோடு முதன்முதலில் சித்தர்பீடம் சென்றாள் வேம்பு.

பள்ளிக்கூட வாத்தியார், பின்னர் ஏதோ சக்தியுள்ள சாமியார், குறி சொல்வார்: சித்தர், பிறகு அடிகளார், இப்பொழுது ஆதிபராசக்தியின் அவதாரம் - என்றெல்லாம் இவ்வுலகோரால் ஆராய்ச்சி செய்யப்பட்டு இன்றைய நிலையில் அடிகளாரை ஆதிபராசக்தியாய் பாவனை செய்யும் அளவிற்கு முன்னேறியுள்ள நம்மில் பலருக்கு, அம்பாளின் ஸ்தூலம் தான் அடிகளார் என்று காஞ்சி முனிவர் சொல்லிக் காட்ட வேண்டியிருந்தது. திருவண்ணாமலை யோகி ராம்சுரத்குமார் அடிகளாரின் காலில் விழுந்து வணங்கிக் காட்ட வேண்டியிருந்தது.

யோகியருக்கும், ஞானியருக்கும், சித்தர்களுக்கும் ‘அடிகளாரே ஆதிபராசக்தி’ என்பதை உணர்த்திய அந்தப் பரம்பொருள், வெறும் பக்தியை மட்டுமே உடைய ஏழைப் பெண் வேம்புவிற்கும் காட்சி கொடுத்து பக்தியின் மேன்மையை உலகிற்கு உணர்த்தியுள்ளாள்.

ஆன்மிககுரு அடிகளார் செவ்வாடை தரித்து சித்தர்பீடத்தை மூன்று முறை வலம் வரும் காட்சியை நம்மில் பலர் கண்டுள்ளோம்.

(தொடர்ச்சி…5ஆம் பக்கம்)

# Melbourne - Mandrams – Upcoming Events – January 2019

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram**

**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்**

(Reg. No. 2193)

விக்டோரியா – அவுஸ்திரேலியா

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**

**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**

**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 04.01.2019 | Friday | மார்கழி | 20 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 06.01.2019 | Sunday | மார்கழி | 22 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 11.01.2019 | Friday | மார்கழி | 27 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 13.01.2019 | Sunday | மார்கழி | 29 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 18.01.2019 | Friday | தை | 04 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 20.01.2019 | Sunday | தை | 06 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 25.01.2019 | Friday | தை | 11 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 27.01.2019 | Sunday | தை | 13 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |

**05.01.2019 – சனி - அமாவாசை, 20.01.2019 – ஞாயிறு - பௌர்ணமி**

## ஒரு பாமர பெண்ணுக்கு..

(4ஆம் பக்க தொடர்ச்சி)

கன்னிக்கோயில் அருகே உள்ள தூண் அருகில் சாதாரண உடையில் அமர்ந்து நம் ஆன்மிக குரு செவ்வாடையுடன் முதல் சுற்று வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள் வேம்பு. இரண்டாவது சுற்று வரும்பொழுது தான் அந்த அற்புதக்காட்சி! பல்லாயிரம் ஆண்டுகள் தங்கள் மீது புற்று முளைக்கும் அளவிற்குத் தவம் கிடப்பவனுக்குக்கூட கிடைக்காத பராசக்தியின் காட்சி, வெளிவேடம் இல்லாத, சுயநலம் இல்லாத, சலனமற்ற மனம் கொண்ட வேம்புவிற்குக் கிடைத்தது.

முதல் சுற்றில் அடிகளாரைப் பார்த்த வேம்புவிற்கு இரண்டாவது சுற்றில் ஆச்சரியமும், அதிர்ச்சியும் காத்திருந்தது. செவ்வாடையணிந்து, கழுத்தில் காசு மாலை, அட்டிகை சூடி, விரிந்து கிடந்த கூந்தலில் மல்லிகைப்பூ, கனகாம்பரம் சூடி அற்புதமான, பிரகாசமான ஒளி வெள்ளத்தில் புன்முறுவலுடன் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தை வலம் வரும் காட்சி கிடைத்தது. மூன்றாவது சுற்றில் மேலும் ஆச்சரியம்! அடிகளாராய் வலம் வரும் காட்சி!

தான் கண்ட இந்தத் திருக்காட்சியை எண்ணித் திக்குமுக்காடிப் போய்விட்டாள் வேம்பு. படித்துப் பட்டம் பெற்ற தமிழறிஞர்களாலேயே வர்ணிக்க முடியாத அந்தத் திருக்காட்சி படிப்பறிவில்லாத பேதைப் பெண் வேம்புவின் மனதில் இனம்புரியாத பயத்தை ஏற்படுத்தியது. அன்று முழுதும் யாருடன் அவள் பேசவில்லை. உணவையும் உட்கொள்ளவில்லை.

மறுநாள் சித்தர்பீடத்திலிருந்து திருவாரூருக்கு வந்தாள். வீட்டிலுள்ளோரிடம் மெதுவாகக் கருவறைப் படத்தைக் காண்பித்து "இதிலிருக்கிறாரே.. இவர் பொம்பளையா மாறுவாரா?" என்று கேட்டாள். நம் ஆன்மிக குருவின் பெயர் கூடத் தெரியாத நிலையில் வேம்புவிற்கு அடிகளார் ஆதிபராசக்தியாய்க் காட்சி கிடைத்துள்ளது. அதன் பிறகு இன்று வரை ஆலயத்திற்குச் செல்லவே பயந்து கொண்டு வர மறுத்து வருகிறாள் வேம்பு.

இன்றிலிருந்து அடிகளார் என்பதும், ஆதிபராசக்தி என்பதும் ஒரே பரம்பொருளைக் குறிக்கும் இரு வேறு பெயர்கள் என்பதை ஏற்றுக்கொண்டு, பக்தியை வளர்த்துக்கொண்டு, ஆன்மிகத்தில் முன்னேறும் வழியைத் தேடுவோம். பக்தியில்லாத அறிவினால் ஒருமித்த சிந்தனையோடு ஆன்மிக குரு அடிகளார் காட்டும் வழியில் உய்ய வழி தேடுவோம்.

அந்தப் பரம்பொருள் நமக்கும் ஒரு நாள் காட்சி கொடுக்காமலா போய்விடும்?
ஓம் சக்தி!



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

*உலக வாழ்க்கை சாரமற்ற ஒன்று, அது வெறும் கனவு எனக் கூறப்படுகிறதே! அது பற்றிக் கூறுங்கள் அம்மா!*

உலக வாழ்க்கை சாரமற்றது என்று சொல்ல முடியாது. நவரசங்களும் நிறைந்தது. வாழ்நாளில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அனுபவம் கிடைக்கிறது. ஒரு நேரம் வாழ்க்கையே வெறுத்துப் போய்விடுகிறது. ஒரு நேரம் மகிழ்ச்சியில் திளைத்து விடுகிறோம். மாறி மாறி வரும் உணர்வுகளால்தான் மனிதன் வாழ முடிகிறது. நிஜ வாழ்க்கையில் கற்பனைகள் தோன்றும், கனவுகள் தோன்றும். ஆனால் வாழ்க்கை வெறும் கனவு என்று சொல்ல முடியாது. பிறப்பு முதல் இறப்பு வரை எத்தனையோ இன்பதுன்பங்கள், வாழ்க்கையைப் பற்றி, அவரவர் அனுபவங்களின் மூலம் உணர்ந்தால்தான் முழுமையாக உணர முடியுமே தவிர, பிறர் கூறும் அல்லது எழுதும் வேதாந்தங்கள் மூலம் உணர முடியாது.

*அம்மா! ஆரம்ப காலத்தில் பூசை முறைகளையும், வழிபாட்டு முறைகளையும் சொல்லிக் கொடுத்த நம் அன்னை, தற்பொழுது, அம்மாவிடம் அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்காதே என்று சொல்கிறார்கள். பேசும் தெய்வத்தை நேரில் கண்ட பின், “நம் குறைகளைக் களைய வேண்டும்” என்று வேண்டாமல் இருக்கும் அளவிற்கு மனம் பக்குவமடையவில்லையே அம்மா?*

ஒரு தாய் தன் குழந்தைக்கு நடக்கக் கற்றுக் கொடுக்கும்போது குழந்தையின் இரண்டு கைககளையும் தன் இரண்டு கைகளால் பற்றிக் கொண்டு மெதுவாக நடக்க வைக்கிறாள். சில நாட்கள் கடந்ததும் ஒரு கையைப் பிடித்து நடக்க வைக்கிறாள். பிறகு குழந்தையே தாயின் கையை உதறி விட்டுத் தானாக நடக்க ஆரம்பிக்கின்றது. அதுபோலத்தான் அம்மாவும் ஆரம்ப காலத்தில் பூசை முறைகளையும், வழிபாட்டு முறைகளையும் சொல்லிக் கொடுத்தார்கள். இப்போது எல்லோரும் அம் முறைகளைப் பின்பற்றிச் செய்து வருகிறோம். தாயைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ளும் வரைதான் குழந்தைகள் தாய்க்குத் தொந்தரவு கொடுக்கும். தாய் தனக்காக எதையும் செய்வாள் என்று தாயைப் பற்றி, உணர்ந்த, வளர்ந்த பிள்ளைகள் தாய்க்குத் தொந்தரவு கொடுப்பதில்லை. அதுபோல ஆன்மிகத்தில் பக்குவப்பட்டவர்கள், அம்மாவைப் பற்றி நன்கு உணர்ந்து, உண்மையான பக்தி செலுத்துபவர்கள், “அம்மா எனக்கு உன் அருளைக் கொடு” என்றுதான் கேட்பார்கள். வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அடிக்கடி கேட்க மாட்டார்கள். எல்லாம் அம்மாவுக்குத் தெரியும் அவள் பார்த்துக் கொள்வாள் என்று வேண்டிக் கொள்வார்கள். நாம் என்னதான் கேட்டாலும், வேண்டினாலும் எதை, எப்போது ஒரு குழந்தைக்குக் கொடுக்க வேண்டும் என்று ஒரு தாய்க்குத் தெரியுமே! அதுபோல நம் அம்மாவும் யார் யாருக்கு எதை, எதை எப்போது கொடுக்க வேண்டும் என நினைக்கிறாளோ அப்போதுதான் கொடுப்பாள். நமக்கு வாழ்க்கை முழுவதும் ஆசைகளும், தேவைகளும், குறைகளும் இருந்து கொண்டேதான் இருக்கும். அதற்காகத் தெய்வத்திடம் வேண்டுவதில் தவறு ஏதும் இல்லை. ஆனால் கொடுப்பதும், கொடுக்காததும் அவளின் விருப்பம். நம்முடைய காணிக்கைகளால் அவளைக் கட்டுப்படுத்த முடியாது.

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**மார்கழி – அமாவாசை–பௌர்ணமி :**
ஆரோக்கிய வாழ்வு உண்டாகும். எவ்விதத்திலும் பாதிக்கப்படாத நிலையும், நல்ல ஆரோக்கியமும் உண்டாகும்.

**தை –அமாவாசை–பௌர்ணமி :**
வாழ்க்கையில் வெற்றி உண்டாகும். வாழ்க்கையில் எல்லா முயற்சிகளிலும் வெற்றி உண்டாகும்.

## Melbourne - Mandrams – Upcoming Events – January 2019



# Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



**Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.**

**Vermont South Community House**,
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 04.01.2019 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 11.01.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 18.01.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 21.01.2019 | MONDAY – திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |
| 25.01.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

**Lalor**

**Join Prayers: Once a month - Sunday 4.00p.m. – 6.00p.m.**
Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

ஆன்மிககுரு
அருள்திரு அடிகளார் அருளிய
## குரு உபதேசங்கள்



### பச்சை மரம், காய்ந்த மரம்!

“பச்சை மரம் தண்ணீருக்குள் அமுங்கி விடுகிறது. காய்ந்த மரம் மிதக்கிறது! காரணம் என்ன? பச்சை மரத்தில் ஈரம் உள்ளது. காய்ந்த மரத்தில் அந்த ஈரம் இல்லை.

பந்த பாசம், ஆசை முதலிய ஈரம் இருப்பதால் எல்லோரும் மிதக்க முடியாமல் அமுங்கிவிடுகிறார்கள். அந்த ஈரம் இல்லாத ஆன்மிகவாதி மிதக்கிறான்!”

### தியானம் பற்றி

“உஷ்ணம்! குளிர்ச்சி! உஷ்ணத்தைக் குளிர்ச்சியாக்குவதும், குளிர்ச்சியை உஷ்ணமாக்குவதும் தான் தியானம்!”.

### மன்றங்கள் மூலமாக

“வேலைக்குப் போகும் பெண்களின் குழந்தைகளையும், அறுவடைக்குப் போகும் பெண்களின் குழந்தைகளையும் வேறுபாடின்றி வளர்க்க வேண்டும்.
அங்கங்கே சில இடங்களை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, அதில் குழந்தைகளைச் சேர்த்து, பால், பிஸ்கட் போன்ற ஊட்டமான உணவு கொடுக்க வேண்டும்.
குழந்தைகளுக்கு நல்ல போதனை, பயிற்சிகள் அளிக்க வேண்டும். வேலையில்லாத பட்டதாரிப் பெண்களுக்கு இவற்றில் வேலை கொடுக்க வேண்டும்.

எதிர்காலத்தில் இக்குழந்தைகள் திருடாமல், பொய் சொல்லாமல், கொலை, கொள்ளை இவற்றில் ஈடுபடாமல் நல்ல மக்களாக வளர வாய்ப்புகளை உண்டாக்க வேண்டும்.

ஆதிபராசக்தி மன்றங்கள் மூலமாக இப்பணிகளை நாம் செய்ய வேண்டும்.”

# Sydney - Mandrams - Upcoming Events – January 2019



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**
Contact: 02-96420519, 0439686452



**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**
Westmead Public Primary School
Moree Street – Westmead

| | | | |
|---|---|---|---|
| 04.01.2019 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 11.01.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 18.01.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 21.01.2019 | MONDAY – திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja பௌர்ணமி விளக்குப் பூஜை |
| 25.01.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

### சென்னை புரசைவாக்கத்தில் நடந்த

## ஒரு குடும்ப நல வேள்வி

குடும்பநல வேள்வியை அன்னை அறிமுகப்படுத்திய ஆரம்ப காலம் அது.

சென்னை புரசைவாக்கத்தில் அன்பர் ஒருவர், தம் வீட்டில் குடும்பநல வேள்வி நடத்த வேண்டும் என விரும்பி அன்னையிடம் உத்தரவு கேட்டார். ஒப்புதல் பெற்றார். அன்னை செவ்வாடைத் தொண்டர்களுக்கு உத்தரவு கொடுத்து அனுப்பி வைத்தாள்.

அந்த வேள்விப்பூசையில் வந்து கலந்துகொள்ளும்படி, அந்தக் குடும்பத் தலைவர் சுவாமி திருமுக கிருபானந்த வாரியார் அவர்களை அழைத்திருந்தார்.

வாரியார் வருகையை ஆவலோடு எதிர்பார்த்தபடி இருந்தனர்.

“திருமண விழா ஒன்றுக்கு அவசரமாகச் சென்று வரவேண்டியிருக்கிறது. எனவே வருவதற்குச் சற்றுத் தாமதம் ஆகும். என்னை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டாம். பூசையை ஆரம்பித்துவிடுங்கள்” என்று வாரியாரிடமிருந்து தொலைபேசியில் செய்தி வந்தது.

“சரி! வேள்வியைத் தொடங்கு! வாரியார் நம் பூசையைப் பார்க்க வேண்டும். எனவே பொறுமையாக, நிதானமாக மந்திரங்களைப் படியுங்கள்” என்றார் வேள்விக்குழுப் பொறுப்பாளர்.

**வேம்பு**

அரை மணி நேரம் நின்று நிதானமாக மந்திரம் படித்தபடி வேள்விப்பூசை நடந்தபடி இருந்தது.

சற்றுநேரம் கழித்து, ‘வாரியார் கிளம்பிவிட்டார். இன்னும் 10, 15 நிமிடங்களில் வந்துவிடுவார்’ என்று தொலைபேசி செய்தி வந்தது.

“வாரியார் புறப்பட்டுவிட்டாராம். அவர் நீண்ட நேரம் இருக்கமாட்டார். சீக்கிரமாக மந்திரம் படித்துமுடி! சீக்கிரம்! சீக்கிரம்!” என்று வேகமாக மந்திரம் படிக்கும்படிப் பொறுப்பாளர்கள் தூண்டினர்.

(தொடர்ச்சி..9ஆம் பக்கம்)


# Sydney - Mandrams - Upcoming Events – January 2019



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**

**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**

Contact: 02-97643872, 0416217317



**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

04.01.2019 – பாடசாலை பொது விடுமுறைகளை முன்னிட்டு பூஜைகள் நடைபெறாது என்பதை அறியத்தருகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| 11.01.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 18.01.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 25.01.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Vilakku Pooja<br>விளக்குப் பூஜை |

## சென்னை புரசைவாக்கத்தில் நடந்த...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரம் படித்த தொண்டர்கள் சிலருக்கு இது எரிச்சல் உண்டாக்கியது. வாரியார் பெரியவர்தான்! இருக்கட்டுமே! அதனால் வசதிக்குத் தக்கபடி மந்திரங்களை வேகமாகப் படிப்பதும், வசதிக்குத் தக்கபடி சீக்கிரம் சீக்கிரமாக முடிப்பதும் முறையல்லவே! அதனால் சிலருக்கு எரிச்சல் ஏற்பட்டது.

இவ்வளவு அமர்க்களங்களையும் அன்று அடிகளார் வேடிக்கை பார்த்தபடி அமர்ந்து கொண்டிருந்தார். அடிகளார் தன்னை யார் என்று அடையாளம் காட்டிக் கொள்ளாத காலம் அது! அன்னையும் அடிகளார் பற்றி வெளிப்படுத்தாத காலம் அது!

வேகமாகப் படித்ததால் 1008 மந்தரமும் சொல்லி முடிக்கப்பட்டது. அடுத்து அந்தக் கலசத்திற்குக் கற்பூர ஆராதனை செய்து வேள்விப்பூசையை நிறைவு செய்ய வேண்டும். வாரியார் வந்தபாடில்லை. அவர் வராமல் கலசத்திற்குத் தீபாராதனை செய்யவிடாமல் அடிகளார் தடுக்கப்பட்டார்.

வாரியார் வருவார், வருவார் என்று எல்லோரும் காத்துக் கொண்டிருந்தனர். ஒரு வழியாக அவர் வந்து சேர்ந்தார். உடனே யாக குண்டத்தின் அருகிலிருந்த குடும்பத் தலைவரும், கலசத்தின் அருகிலிருந்த குடும்பத் தலைவியும் அப்படியே எழுந்து வாரியாரை வரவேற்கக் கிளம்பிவிட்டனர். வரவேற்பு! மாலை மரியாதை! போட்டோகிராபரின் படம் எடுக்கும் சடங்குகள்! வாரியாரை உபசரிக்கும் நோக்கில் குடும்பத் தலைவி சமையலறைக்குக் கிளம்பிவிட்டார்.

இந்தச் சந்தடிகளெல்லாம் ஓய்ந்து முடிந்தபிறகு அருள்திரு அடிகளார் வேள்விக் குண்டத்திற்கும், கலசத்திற்கும் கற்பூர ஆராதனை செய்து வேள்வியை நிறைவு செய்தார்.

அன்னையின் உத்தரவுகளைத் தொண்டர்கள் மீறுகின்றபோதும், பொறுப்பாளர்கள் புறக்கணிக்கின்றபோதும் அடிகளார் கண்டித்து கூறுவதே இல்லை. அதுதான் அன்றைய நிலைமை!

இரண்டு நாட்கள் கழித்து, ஆலயத்தில் வேள்விப் பொறுப்பாளர்களுக்கு அருள்வாக்கின்போது அன்னை சற்றுக் கடுமையாகவே கூறினாள்.

“மகனே! வேள்வி நிறைவடைந்ததும் உடனே கற்பூர ஆராதனை செய்து எனக்கு விடைகொடுத்து அனுப்பி வைக்கவேண்டியதுதானே உன் கடமை? அவன் ஒருவனால் (வாரியார்) எவ்வளவு நேரமடா என்னைக் காக்க வைப்பது? அவனுக்கே இந்த விஷயமெல்லாம் தெரியுமே..?

உங்களுக்கெல்லாம் என்ன சொல்லியிருக்கிறேன்? 1008 முடிந்து, 108 முடிந்ததும், பாலகன் கையால் தீபாராதனை செய்து முடிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறேனல்லவா? அதை விட்டுவிட்டு, அவனுக்காக என்னைக் காத்திருக்கும்படிச் செய்வது தவறு! இந்த முறை மன்னித்தேன். இனி ஒரு முறை இப்படி நடக்காமல் பார்த்துக்கொள்!” என்றாள் அன்னை.

(தொடர்ச்சி..10ஆம் பக்கம்)

## சென்னை புரசைவாக்கத்தில் நடந்த...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதிலிருந்து தெரிந்து கொள்வது என்ன?

அன்னை அருளிய விதிமுறைப்படி மந்திரபூர்வமாக வேள்விக்கலசத்தை நிறுத்தி அன்னையை வழிபாடு செய்கிறபோது, அந்தத் தீபாராதனை முடிகிற வரையில் அங்கே அன்னை எழுந்தருளுகிறாள். அந்தப் பூசையைத் தானே ஏற்றுக்கொள்கிறாள். இறுதியாகக் கற்பூர தீபாராதனையை ஏற்றபின் அங்கிருந்து விடைபெறுகிறாள் என்பதெல்லாம் தெரிகிறது அல்லவா?

யாக குண்டத்தை விட்டு எழுந்தோடி வரவேற்ற அந்தக் குடும்பத் தலைவர் ஆசை ஆசையாக வாரியாரோடு எடுத்துக்கொண்ட போட்டோக்களில் எந்த உருவமும் விழவில்லை. எடுத்த படம் எல்லாம் வீணானதுதான் மிச்சம்!

ஓம் சக்தி!


**புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**



ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த
**ஆதிபராசக்தி இணையத்தளம்**
**ww.adhiparasakthi.co.uk**

**"ஜோதி" ஆன்மிகச் செய்திச் சுடரை**
**www.adhiparasakthi.co.uk என்ற**
**இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.**


## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

**சக்தி ஒளி**
**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயுள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,'Sakthi Oli' Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.

# ஜோதி கண்டேன்! சூலமும் கண்டேன்!

கனடாவில் மார்க்கம் (Markham) என்பது ஒரு பகுதி. அங்கே ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் செயல்பட்டு வருகிறது.

திருமதி ஞானம்மா திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் அது சிறப்பாக இயங்கி வருகிறது. நானும், என் கணவரும் அங்கே சென்று வழிபடுவோம். தொண்டுகள் செய்து வருவோம்.

மன்றத்தில் 2002ஆம் ஆண்டு (06.10.2002) முதல் நவராத்திரி விழாவைக் கொண்டாடத் திட்டமிட்டார்கள். ஆரம்ப நாளன்று முறைப்படி வழிபாடு செய்யப்பட்டது. அகண்ட தீபம் ஏற்றப்பட்டது..

அன்று அம்மாவின் படத்தில் பக்தர்கள் பலருக்கும் பலவிதக் காட்சிகள் கிடைத்தன. எனக்கோ அங்கிருந்த எந்தப் படத்தைப் பார்த்தாலும் ஒரு ஜோடிக் கண்கள் என்னையே பார்ப்பது போலத் தெரிந்தது. இது எனக்குக் கிடைத்த அனுபவம்!

தொடர்ந்து பூஜைகள் நடைபெற்று வந்தன. 7ஆம் நாளன்று மன்றத்தில் சரஸ்வதி பூஜை!

அன்று எல்லோரும் மனம் குளிர வழிபாட்டுப் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தோம். அப்போது.. அம்மாவின் படத்திலிருந்து பூ ஒன்று விழுந்தது. அதனைத் தொடர்ந்து நான்கு பூக்கள் விழுந்தன.

**சக்தி புஷ்பஜோதி மனோரஞ்சிதம்**
- கனடா -

எங்கள் மன்றத் தலைவி மிகவும் பரவசப்பட்டு, சக்தி! அம்மா வந்து விட்டாள்! வந்து விட்டாள்! அம்மா படத்திலிருந்து விபூதி, சந்தனம், குங்குமம் கொடுக்கிறாள். அமைதியாக வந்து பாருங்கள்! என்று கூவினார். எல்லோரும் சென்று பார்த்தோம்.

அம்மாவின் படத்தில் அடிகளார் அமர்ந்திருக்கும் இடத்திற்கு அருகில் படத்திலிருந்து புள்ளி புள்ளியாக வெண்மையான நிறத்தில் விழுந்த வண்ணம் இருந்தது.

அடுத்து மஞ்சள் நிறச் சந்தனம் வந்தது. இறுதியில் சிவப்பான குங்குமம் அடிகளார் சிரசுப் பகுதியிலிருந்து கொட்டிக் கொண்டிருந்தது.

ஓம் சக்தி! ஓம் சக்தி! அம்மா அற்புதம் காட்டி விட்டாள் என்று அதிசயித்து ஆனந்த பரவசம் அடைந்தோம். தொடர்ந்து பூஜை நடந்த நாட்களில் அர்ச்சனை செய்து கொண்டு நிற்கும்போது, அதே குங்குமம் கொட்டிய வண்ணம் இருந்தது. திருவுருவப் படத்திற்கு அணிவித்திருந்த மாலை வளர்ந்தது. எல்லோரும் ஓம் சக்தி! ஓம் சக்தி! என்று கண்ணீர் மல்கப் பரவசப்பட்டோம்.

அன்று எல்லோரும் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பினோம். மறுநாள் விஜயதசமி பூஜைக்கு வருவதாகச் சொல்லிவிட்டே கிளம்பினோம். மறுநாளும் வழிபாட்டில் கலந்து கொண்டு வீடு திரும்பினோம்.

நாங்கள் வீடு வந்து சேர்ந்தபோது… இரவு 10 மணி. எங்கள் வீட்டுப் பூஜை அறையில் உள்ள விளக்குகளைக் குளிர வைத்து விட்டு வருகிறேன் என்று என் கணவர், கீழ் மாடியிலுள்ள பூஜை அறைக்குச் சென்றார். அவசரமாக என்னை அழைத்தார்.

நானும் எங்கள் வீட்டுப் பூஜை அறைக்குச் சென்று பார்த்தேன்.

'இந்த ஒரு விளக்கு மட்டும் பிரகாசமாகவும், வித்தியாசமாகவும் எரிகிறது பார்த்தாயா.. என்றார்.

சரி! அறையில் எரியும் மின் விளக்குகளை அணையுங்கள்! பார்க்கலாம்! என்றேன்.. அவ்வாறே செய்தார். அப்போது…
அங்கே வைக்கப்பட்ட ஓம் சக்தி விளக்கு அடிகளார் படத்துக்கு முன்பாக ஏற்றப்பட்டிருந்தது. அது ஒரு நட்சத்திரம்போலப் பிரகாசித்தும் பின் 'ஓம்' என்று தெரிவது போல விரிந்து பரவி ஜோதிக் காட்சியை நல்கியது.

அம்மா! எங்கள் வீட்டிலேயும் நீ வந்து விட்டாயா..? என்று வாய்விட்டுக்கூறி அதிசயப்பட்டோம். அப்படிச் சொல்லும்போதே…திடீரென அந்தத் தீபச்சுடர் தங்கக் கம்பி போல் மூன்றடி உயரத்துக்கு எழும்பிப் பின்பு விரிந்து இரு பக்கங்களாக சூலமாகக் காட்சி கொடுத்தது.

இதைப் பார்த்து என் அம்மாவும், அப்பாவும் ஓம் சக்தி! ஓம் சக்தி! எனக் கூவினர்.

(தொடர்ச்சி..12ஆம் பக்கம்)

# ஜோதி கண்டேன்! சூலமும்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

“இன்று விஜயதசமி! அன்னை சூலம் ஏந்திப் போருக்கு போகும் நாள் அல்லவா..! அதனை அம்மா நமக்குக் காட்டி விட்டாள்” என்றார் என் கணவர்.

மறுநாள் எங்கள் மன்றத் தலைவியிடமும், மற்றவர்களிடமும் அம்மா எங்கள் வீட்டில் நடத்திய அற்புதங்களைச் சொன்னோம்.

இது எங்களுக்கு மட்டும் தெரிந்தால் போதுமா! உலகில் உள்ள அம்மா பக்தர்கள் அனைவருக்கும் தெரிய வேண்டாமா..? சக்தி ஒளிக்கு எழுதி அனுப்புங்கள் என்றார் எங்கள் மன்றத் தலைவி.

# கல்லூரியில் இடம் கிடைக்க அலுவலர்களை மாற்றிய அன்னை

என் மகன் திருச்சியில் 12ஆம் வகுப்பு படித்து முடித்து கல்லூரி செல்லும் நேரம். நாம் தேர்ந்தெடுத்த கல்லூரியில் நேர்முகத் தேர்வுக்கு சென்றிருந்தோம். எல்லா சான்றிதல்களும் சரி பார்த்து தேர்ந்தெடுத்த அவர்கள் நீங்கள் இலங்கை நாட்டவர் அல்லவா! 10 நாட்களுக்குள் விசாவுடன் வந்து பணம் கட்டி சேர்ந்து விடுங்கள் என்றார்கள். அன்று அலுவலகத்தில் ஐவர் இருந்தனர். எனக்கோ கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போலிருந்தது. என்னவென்று சொல்வேன். நாட்டில் பிரச்சனை காரணமாக விசாவைப் புதுப்பிக்காமல் விட்டுவிட்டேன். பிள்ளையின் மேற்படிப்புக்கு பங்கம் வந்துவிடுமோ என வேதனைப்பட்டேன். விசா புதுப்பிக்க கடவுச்சீட்டு டெல்லிக்கு அனுப்ப வேண்டும். வந்தபின் இலங்கை சென்று விசா எடுத்துவர எப்படியும் 6 மாதமாகுமே என்ன செய்வேன்.

ஆறுதல் சொல்வார் பலர் இருந்தாலும் அன்னை சொல்வது போலாகுமா என ஓடோடி மருவத்தூர் சென்று அன்னையிடம் பாதபூசை செய்து பிரச்சனையைக் கூற வழி கேட்க அன்னை “நீ போ அந்தக் கல்லூரியில் இடம் கிடைக்கும் பணம் எல்லாம் தராதே நான் பார்த்துக்கொள்கிறேன்” என்றாள்.

**சக்தி சிவலக்ஷ்மி இராமநாதன்**

மூன்று நாட்களுக்கு முன் தானே கல்லூரிக்குப் போய் வந்தோம். கண்டிப்பாக விசா இருந்தால் மட்டுமே இடம் என்றார்களே அம்மா இப்படி சொல்கிறாளே என மன சஞ்சலத்துடன் திருச்சி வந்தேன்.

எமக்குச் சிறிதே பழக்கப்பட்ட அக்கல்லூரியில் வேலை பார்க்கும் ஆசிரியர் ஒருவர் மறுநாள் என் மகனைப் பார்த்து உனக்கு இடம் கிடைத்து விட்டதா எனக் கேட்க அவனும் இல்லை என்றிருக்கிறான். ஆசிரியரும் இன்று கல்லூரிக்கு வந்து பார் எனக் கூறியிருக்கிறார். மீண்டும் நாம் கல்லூரி செல்ல மீண்டும் சான்றிதழ்கள் பரீட்சிக்கப்பட்டு எவ்விதக் கேள்வியும் இல்லாது இடம் தரப்பட்டது. முதலில் சென்ற சமயம் இருந்த ஐவரும் அன்றில்லை. வேறு நால்வரே இருந்தனர்.

என்னவென்று உரைப்பேன் அம்மாவின் கருணையை எப்படிக் கூறுவேன். ஆளைமாற்றி இடம் கிடைக்க வைத்தாளே அன்னை. அதுமட்டுமன்றி டொனேஷன் என்ற பெயரிலும் எங்களிடம் பணம் ஒரு ரூபாய்கூட வாங்கவில்லை.

## ஆன்மா பயிர் - ஆணவம் களை

**“ஆன்மா என்ற பயிரில் ஆணவம் என்கிற களை இருந்தால்**
**அது என்றாவது ஒருநாள் களைந்துதான் ஆக வேண்டும்.”**

## பற்றும் இருக்க வேண்டியிருக்கிறது!

**“ஆன்மிகத்துறையில் ஒரு நிலையாக இருக்க வேண்டும்.**
**ஆன்மா வளரவும், அறிவு வளரவும் பற்றும் இருக்க வேண்டும்.”**

## ஆன்மாவிற்கும் - வழிபாட்டுக்கும் தொடர்பு

**“உடம்பு, உணவு, இயங்கும் சக்தி இவற்றுக்கும் இறப்புக்கும் தொடர்பு உண்டு.**
**ஆனால் ஆன்மாவிற்கு எதுவும் இல்லை. ஆன்மாவுக்கும் வழிபாட்டுக்கும்தான் தொடர்பு உண்டு.”**

அன்னையின் அருள்வாக்கு

குருவடி சரணம்! திருவடி சரணம்!!



## ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!

## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

### ஆலய சிறப்பு விழாக்கள்

## 2019 - ஸ்ரீ விளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| மார்கழி | 17 | **01.01.2019** | செவ்வாய் | ஆங்கிலப் புத்தாண்டு |
| மார்கழி | 21 | **05.01.2019** | சனி | அமாவாசை வேள்வி |
| தை | 01 | **15.01.2019** | செவ்வாய் | தைப் பொங்கல் |
| தை | 07 | **21.01.2019** | திங்கள் | சித்தர்பீடத்தில்தைப்பூச ஜோதிப் பெருவிழா |
| தை | 21 | **04.02.2019** | திங்கள் | அமாவாசை வேள்வி |
| மாசி | 07 | **19.02.2019** | செவ்வாய் | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| மாசி | 19 | **03.03.2019** | ஞாயிறு |  ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின் 79ஆவது அவதாரப் பெருமங்கள விழா |
| மாசி | 22 | **06.03.2019** | புதன் | அமாவாசை வேள்வி |
| பங்குனி | 06 | **20.03.2019** | புதன் | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| பங்குனி | 21 | **04.04.2019** | வியாழன் | அமாவாசை வேள்வி |
| பங்குனி | 23 | **06.04.2019** | சனி | தெலுங்கு வருடப் பிறப்பு |

## 2019 - ஸ்ரீ விகாரி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| சித்திரை | 01 | **14.04.2019** | ஞாயிறு | தமிழ் புத்தாண்டு |
| சித்திரை | 06 | **19.04.2019** | வெள்ளி | சித்திரைப் பௌர்ணமி வேள்வி பெருவிழா |
| சித்திரை | 21 | **04.05.2019** | சனி | அமாவாசை வேள்வி |
| வைகாசி | 04 | **18.05.2019** | சனி | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| வைகாசி | 20 | **03.06.2019** | திங்கள் | அமாவாசை வேள்வி |
| ஆனி | 01 | **16.06.2019** | ஞாயிறு | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| ஆனி | 17 | **02.07.2019** | செவ்வாய் | அமாவாசை வேள்வி |
| ஆனி | 31 | **16.07.2019** | செவ்வாய் | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| ஆடி | 15 | **31.07.2019** | புதன் | அமாவாசை வேள்வி |
| ஆடி | 18 | **03.08.2019** | சனி | சித்தர் பீடத்தில் 48ஆவது |
| ஆடி | 19 | **04.08.2019** | ஞாயிறு | ஆடிப்பூர பெருவிழா |
| ஆடி | 30 | **15.08.2019** | வியாழன் | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| ஆவணி | 13 | **30.08.2019** | வெள்ளி | அமாவாசை வேள்வி |
| ஆவணி | 27 | **13.09.2019** | வெள்ளி | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| புரட்டாசி | 11 | **28.09.2019** | சனி | அமாவாசை வேள்வி |
| புரட்டாசி | 12 | **29.09.2019** | ஞாயிறு | சித்தர்பீடத்தில்<br>நவாராத்திரி பெருவிழா ஆரம்பம் |
| புரட்டாசி | 26 | 13.10.2019 | ஞாயிறு | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| ஐப்பசி | 10 | **27.10.2019** | ஞாயிறு | அமாவாசை வேள்வி |
| ஐப்பசி | 26 | **12.11.2019** | செவ்வாய் | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| கார்த்திகை | 10 | 26.11.2019 | செவ்வாய் | அமாவாசை வேள்வி |
| கார்த்திகை | 25 | **11.12.2019** | புதன் | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| மார்கழி | 09 | **25.12.2019** | புதன் | அமாவாசை வேள்வி |

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01.01.2019 | செவ்வாய் | மார்கழி | 16 | **ஆங்கிலப் புதுவருடப் பிறப்பு** |
| 02.01.2019 | புதன் | மார்கழி | 18 | ஏகாதசி விரதம் |
| 03.01.2019 | வியாழன் | மார்கழி | 19 | பிரதோஷ விரதம் |
| 05.01.2019 | சனி | மார்கழி | 21 | **அமாவாசை விரதம் - அனுமர் ஜயந்தி** |
| 10.01.2019 | வியாழன் | மார்கழி | 26 | சதுர்த்தி விரதம் |
| 12.01.2019 | சனி | மார்கழி | 28 | ஷஷ்டி விரதம் |
| 15.01.2019 | செவ்வாய் | தை | 01 | **தைப்பொங்கல்** |
| 16.01.2019 | புதன் | தை | 02 | **மாட்டுப் பொங்கல் - கார்த்திகை விரதம்** |
| 17.01.2019 | வியாழன் | தை | 03 | ஏகாதசி விரதம் |
| 19.01.2019 | சனி | தை | 05 | சனிப்பிரதோஷ விரதம் |
| 20.01.2019 | ஞாயிறு | தை | 06 | **பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி |
| 21.01.2019 | திங்கள் | தை | 07 | **தைப்பூசம்** |
| 24.01.2019 | வியாழன் | தை | 10 | சங்கடஹர சதுர்த்தி |
| 25.01.2019 | வெள்ளி | தை | 11 | **திருவிளக்குப் பூஜை**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் - சிட்னி |
| 28.01.2019 | திங்கள் | தை | 14 | **கொடியேற்றம்**<br>**மாத்தளை அருள்மிகு முத்துமாரியம்மன் -இலங்கை** |
| 31.01.2019 | வியாழன் | தை | 17 | ஏகாதசி விரதம் |
| 02.02.2019 | சனி | தை | 19 | சனிப்பிரதோஷ விரதம் |
| 04.02.2019 | திங்கள் | தை | 21 | **தை அமாவாசை விரதம்** |
| 09.02.2019 | சனி | தை | 26 | சதுர்த்தி விரதம் |
| 11.02.2019 | திங்கள் | தை | 28 | **ஷஷ்டி விரதம்**<br>**கொடியேற்றம் -**<br>குன்றத்துக் குமரன் ஆலயம் - ரொக்பேங்க் - மெல்போர்ண்<br>**கொடியேற்றம் -**<br>ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் - ரீஜண்ட்ஸ் பார்க் - சிட்னி |
| 13.02.2019 | புதன் | மாசி | 01 | கார்த்திகை விரதம் |
| 16.02.2019 | சனி | மாசி | 04 | ஏகாதசி விரதம் |
| 17.02.2019 | ஞாயிறு | மாசி | 05 | பிரதோஷ விரதம் |
| 19.02.2019 | செவ்வாய் | மாசி | 07 | **மாசி மகம்**<br>**தேர் உற்சவம்**<br>குன்றத்துக் குமரன் ஆலயம் - ரொக்பேங்க் - மெல்போர்ண்<br>ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் - ரீஜண்ட்ஸ் பார்க் - சிட்னி<br>**பஞ்சரத பவனி**<br>**மாத்தளை அருள்மிகு முத்துமாரியம்மன் -இலங்கை**<br>**பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம்-சிட்னி |
| 20.02.2019 | புதன் | மாசி | 08 | **தீர்த்தம்**<br>குன்றத்துக் குமரன் ஆலயம் - ரொக்பேங்க் - மெல்போர்ண்<br>ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் - ரீஜண்ட்ஸ் பார்க் - சிட்னி |
| 22.02.2019 | வெள்ளி | மாசி | 10 | சங்கடஹர சதுர்த்தி<br>**திருவிளக்குப் பூஜை**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் - சிட்னி |
| 03.03.2019 | ஞாயிறு | மாசி | 19 | பிரதோஷ விரதம்<br>**ஆன்மிககுரு அருள்திரு பங்காரு அடிகளாரின்**<br>**அவதாரத் திருநாள் பெருவிழா 2019** |
| 12.03.2019 | செவ்வாய் | மாசி | 28 | ஷஷ்டி விரதம் - கொடியேற்றம் - முருகன் ஆலயம் - சிட்னி |
| 12.04.2019 | வெள்ளி | பங்குனி | 29 | **புனருத்தான கும்பாபிஷேகம்**<br>நண்பகல் 12.00 மணி முதல் முற்பகல் 1.00 மணி வரை<br>ஸ்ரீ சிவா-விஷ்ணு ஆலயம் -கரம்டவுண்ஸ் - மெல்போர்ண் |